சுருக்கம்

கருணை அடிப்படையிலான பணி நியமனம் – குறும வயது நிர்ணயித்து விண்ணப்பங்கள் பெறுவது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசு கடித (நிலை) எண்.86, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 4.5.2010–க்கு திருத்தம் மற்றும் தெளிவுரைகள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை

அரசாணை(நிலை) எண்: 155

நாள்: 10.12.2014
ஜய வருடம்,
கார்த்திகை மாதம் 24–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அரசு கடித எண்.66813/க்யூ1/91–3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 22.11.1991.
2. அரசாணை (நிலை) எண்.112, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 23.8.2005.
3. அரசு கடித (நிலை) எண்.86/க்யூ 1/2010, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 04.05.2010.

------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் தொடர்பான இதர விதிமுறைகளுக்கிடையே, பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின், 18 வயதிற்குட்பட்ட வாரிசுதாரருக்கும், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என தெளிவுரைகள் வழங்கப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசுப்பணிக்கான குறும வயது 18 எனவும், காலிபணியிட அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் ஜூலை முதல் நாளில் 18 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும் எனவும், இந்த ஆணை 23.08.2005 முதல் நடைமுறைக்கு வருவதாகவும், இவ்வாணை, கருணை அடிப்படையிலான பணிநியமனங்களுக்கும் பொருந்தும் எனவும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதி 12–க்கு திருத்தம் செய்து பொது விதி 12(bbb) என்பதை சேர்த்து அறிவிக்கை (Notification) வெளியிடப்பட்டது.

3. மேலே 3–ல் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில், பத்தி 5–ல், கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கு குறும வயது நிர்ணயிப்பது தொடர்பாக பின்வரும் தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன :–

(i) 23.8.2005–க்கு முன்னர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 3 ஆண்டு காலக்கெடுவுக்குள் பெறப்பட்ட விண்ணப்பம், வாரிசுதாரர் 18 வயதினை நிறைவு பெறாமல் இருந்தாலும், கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான ஏனைய பிற தகுதிகளை நிறைவு செய்யும்பட்சத்தில் தகுதியானதாகக் கருதப்பட வேண்டும்.

(ii) 23.8.2005 முதல் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான குறும வயது 18 என நிர்ணயிக்கப்பட்டதால், அரசு கடித எண்.66813/க்யூ.1/91–3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 22.11.1991–இல் வெளியிடப்பட்ட தெளிவுரைகள் நீக்கப்பட்டவையாக கருதப்பட்டு 23.8.2005–க்கு பின்னர் 18 வயது நிரம்பிய வாரிசுதாரர் மட்டுமே கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறத் தகுதியானவர் எனக் கருதப்பட வேண்டும்.

(iii) கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு அரசு ஊழியர் இறந்து மூன்றாண்டிற்குள் விண்ணப்பதாரர், விண்ணப்பம் அளிக்கும் நாளினையே கணக்கில் கொண்டு வயது மற்றும் கல்வித் தகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(iv) மேலே பத்தி 5 (iii)-இல் உள்ள தெளிவுரை இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் (அதாவது 04.05.2010 முதல்) நடைமுறைக்கு வரும்.

4. இந்நிலையில், மேற்படி கடிதத்தில், பத்தி 5(iii)–ல் வழங்கியுள்ள தெளிவுரை, ஆணை வெளியிடப்படும் நாளான 04.05.2010 முதல் அமலுக்கு வரும் என பத்தி 5(iv)-ல் குறிப்பிடப்பட்டுள்ளதால், இது பார்வை 2–ல் கண்ட அரசாணையில் திருத்தம் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதி 12(bbb)-க்கு முரணாக அமைந்துள்ளது. இந்த முரண்பாட்டினால் 23.08.2005–க்கும் 04.05.2010–க்கும் இடைப்பட்ட காலங்களில் கருணை அடிப்படையில் பணிகோரி விண்ணபித்தவர்களின் கோப்புகளில் பல புதிய சிக்கல்கள் எழவும், பாதிக்கப்பட்டோர் நீதிமன்றம் செல்ல வாய்ப்பு உள்ளதாலும், கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய நாள் குறித்து சில துறைத் தலைமையகங்கள் அரசின் தெளிவுரையை வேண்டியுள்ளன.

5. எனவே, மேலே 3–ல் படிக்கப்பட்ட அரசு (நிலை) கடிதத்திற்கு திருத்தம் வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதன்படி, மேலே 3–ல் படிக்கப்பட்ட அரசு கடிதத்திற்கு பின்வருமாறு திருத்தம் மற்றும் தெளிவுரைகள் வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது :–

| வ. எண் | தற்போதுள்ள ஆணை | திருத்தம் |
|---|---|---|
| (i) | <u>பத்தி 5 (ii):</u><br><br>23.08.2005 முதல் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான குறும வயது 18 என நிர்ணயிக்கப்பட்டதால், அரசு கடித எண்..66813/க்யூ 1/91-3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 22.11.1991-ல் வெளியிடப்பட்ட தெளிவுரைகள் நீக்கப்பட்டவையாகக் கருதப்பட்டு, 23.08.2005–க்கு பின்னர் 18 வயது நிரம்பிய வாரிசுதாரர் மட்டுமே கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறத்தகுதியானவர் எனக் கருதப்பட வேண்டும். | 23.08.2005 முதல் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான குறும வயது 18 என பொது விதி 12(bbb)–ல் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், 04.05.2010 முதல் விண்ணப்ப நாளில் இத்தகுதி பெறுதல் வேண்டும் என அரசுக் கடிதம் (நிலை) எண்.86, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 04.05.2010–ல் அறிவுறுத்தங்கள் வெளியிடப்பட்டமையால், அரசு கடித எண். 66813/க்யூ 1/91–3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, |

| | | |
|---|---|---|
| | | நாள் 22.11.1991–ல் வெளியிடப்பட்ட தெளிவுரைகள் நீக்கப்பட்டவையாகக் கருதப்பட்டு, 04.05.2010 முதல் 18 வயது நிரம்பிய வாரிசுதாரர் மட்டுமே கருணை அடிப்படையில், பணி கோரி விண்ணப்பம் அளித்து, பணிநியமனம் பெறத்தகுதியானவர் எனக் கருதப்படுவர். |
| (ii) | <u>பத்தி 5 (iv):</u><br><br>பத்தி 5 (iii)–ல் உள்ள தெளிவுரை இவ்வாணை வெளியிடப்படும் நாள் (04.05.2010) முதல் நடைமுறைக்கு வரும் | நீக்கம் செய்யப்படுகிறது. |

6. மேற்படி திருத்தம் வெளியிட்ட பின்னர், 23.08.2005 முதல் 03.05.2010 வரை உள்ள இடைப்பட்ட காலங்களில் விண்ணப்ப நாளில் 18 வயது பூர்த்தி ஆகாமல் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி காத்திருப்பவர்களுக்கும் கீழ்க்கண்டவாறு பரிசீலிக்கலாம் எனவும் தெளிவுரைகள் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.:-

"23.08.2005 முதல் 03.05.2010 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் அளித்தவர்கள் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான குறும வயதுத் தகுதி தவிர, அனைத்து பிற தகுதிகளை பணிகோரிய விண்ணப்ப நாளிலும், குறும வயதுத் தகுதி மட்டும் (18 ஆண்டுகள் நிறைவு) பணி நியமன நாளிலும் நிறைவு செய்திருந்தால் போதுமானதாக கருதப்பட வேண்டும்."

7. மேலும், 23.08.2005–லிருந்து 03.05.2010 வரையிலான இடைப்பட்ட காலங்களில் 18 வயதினை பூர்த்தி செய்யாதவர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டிருந்தால், கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான தகுதிகளில் குறும வயது தவிர அனைத்து பிற தகுதிகளை நிறைவு செய்திருக்கும்பட்சத்தில், அவ்வாறான நேர்வுகளை தனித்தனியாக பரிசீலிக்கப்பட வேண்டும் எனவும் ஆணை வெளியிடப்படுகிறது.

8. மேற்காணும் திருத்தம் மற்றும் தெளிவுரைகளின் அடிப்படையில் அனைத்து கருணையடிப்படை பணி நியமனங்களையும் ஆய்வு செய்து நடவடிக்கை தொடருமாறு அனைத்து பணி நியமன அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மா. வீரசண்முக மணி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

அரசு முதன்மைச் செயலாளர்/செயலாளர், தலைமைச் செயலக அனைத்துத் துறைகள்.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.

மாநில கணக்காயர், சென்னை—18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை—35.
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள் / அனைத்து கருவூல அலுவலர்கள்.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை—9.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை—9.
அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள், சென்னை—9.

நகல்

அரசுச் செயலாளரின் தனிச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அனைத்து பிரிவுகள்.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை / சட்டத்துறை, சென்னை —9.
இருப்பு கோப்பு (30200/க்யூ.1/2010)
உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கி. வைரம்
11/12/14.
பிரிவு அலுவலர்